## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1997 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) (திருத்தச்) சட்டம்

---

*(1997, ஒக்தோபர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1997, ஒக்தோபர் மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 5.25 தபாற் செலவு : ரூபா 2.50

# 1997 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) (திருத்தச்) சட்டம்

[1997, ஒக்தோபர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.– ஓ. 14/97

## பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

1. இச்சட்டம் 1997 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:– 383 ஆம் அத்தியாயத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :–

> "(2) இச்சட்டத்திற்கான அட்டவணையில் (அதன் பாகம் அ என்பதிலாயினுஞ்சரி அல்லது பாகம் ஆ என்பதிலாயினுஞ்சரி) குறித்துரைக்கப்பட்ட பாராளுமன்றச் சிறப்புரிமைகள் மீறல் ஒவ்வொன்றும் இதனகத்துப் பின்னர் அதன் சார்பில் அடங்கியுள்ள ஏற்பாடுகளின்கீழ் இப்பாகத்தின்கீழ் உயர்நீதிமன்றத்தால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றாதல் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும் :–

> "(3) இச்சட்டத்திற்கான அட்டவணையின் பாகம் ஆ என்பதில் குறித்துரைக்கப்பட்டதும் பாராளுமன்றம் சம்பந்தமாக அல்லது அது தொடர்பில் புரியப்பட்டதுமான பாராளுமன்றச் சிறப்புரிமைகள் மீறல் ஒவ்வொன்றும், இப்பாகத்தின்கீழ் அதன் சார்பில் அடங்கியுள்ள ஏற்பாடுகளின்கீழ் பாராளுமன்றத்தால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றாதல் வேண்டும்.

2-டீ- 045697-1,100 (97/08)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் :—

> "(1) உட்பிரிவுகள் (2) அத்துடன் (3) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றமானது, இச்சட்டத்திற்கான அட்டவணையின் பாகம் ஆ என்பதில் குறித்துரைக்கப்படுவதும் எவரேனும் உறுப்பினரால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் பாராளுமன்றம் சம்பந்தமாக அல்லது அது தொடர்பில் புரியப்படுவதுமான பாராளுமன்றச் சிறப்புரிமைகளின் மீறுகை எதனையும் சுருக்கமுறையில் தண்டிப்பதற்கான தத்துவமும் நியாயாதிக்கமும் கொண்டிருத்தல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் உட்பிரிவு (1அ) என்பதனை நீக்கஞ் செய்வதன்மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும் :

> "அட்டவணையின் பாகம் ஆ என்பதில் குறித்துரைக்கப்பட்ட தவறுகள்மீது பாராளுமன்றத்தின் நியாயாதிக்கம்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவை நீக்குதல்.

5. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

6. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 5ஆம் இலக்க, தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தாலும் 1987 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:–

"பாராளுமன்றம் விதிக்கக்கூடிய தண்டனை.

28. இப்பாகத்தின்கீழ் ஏதேனும் தவறுக்காகப் பாரளுமன்றத்தினால் விதிக்கப்படக்கூடிய தண்டனையானது, பாராளுமன்றத்தின் அவை வரம்பில் நிறுத்தி எச்சரித்தலாகிய அல்லது பாராளுமன்ற வளவுகளிலிருந்து அகற்றுதலாகிய தண்டனையாக இருத்தல் வேண்டும் :

ஆயினும், எவ்வாறாயினும், பாராளுமன்ற உறுப்பினரொருவரால் புரியப்படும் தவறொன்றின் விடயத்தில், பாராளுமன்றமானது, இதனகத்துமுன்னர் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தண்டனைக்கு மேலதிகமாக அல்லது அதற்குப் பதிலாக, அவரை ஒருமாதத்திற்கு மேற்படாத ஏதேனும் காலப்பகுதிக்குப் பாராளுமன்றத்தின் சேவையிலிருந்து விலக்கி வைக்குமாறு கட்டளையிடலாம் :

ஆயினும், மேலும், உறுப்பினரொருவராக அல்லாத ஆளொருவரால் புரியப்படும் ஏதேனும் தவறொன்றின் விடயத்தில் பாராளுமன்றமானது, அத்தகைய ஆள் ஆறுமாதங்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்குப் பாராளுமன்றத்திற்குள் அல்லது அதன் வளவுகளுக்குள் பிரவேசிப்பதினின்று தடைசெய்யப்பட வேண்டுமெனவும் கட்டளையிடலாம் .".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

7. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 5ஆம் இலக்க, தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தால் திருத்தப் பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:–

"பாராளுமன்றத் தண்டனைத் தத்துவத்தை வரையறை செய்தல்.

32. இச்சட்டத்திலுள்ள எதுவும், எவரேனும் ஆளின்மீது, அட்டவணையின் பாகம் ஆ என்பதில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் தவறுக்கு இச்சட்டத்தின் 28ஆம் பிரிவால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் தண்டனையை விதிப்பதற்கான ஏதேனும் தத்துவத்தைத் தவிர வேறு ஏதேனும் தண்டனையை விதிப்பதற்கான தத்துவம் எதனையும் பாராளுமன்றத்திற்கு அளித்தலோ அல்லது அளிப்பதாகப் பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது .".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையைத் திருத்துதல்.

8. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 5ஆம் இலக்க, தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை அவ்வட்டவணையின் பாகம் அ என்பதில் அதன்கண் காணப்படும் தலைப்புக்குப் பதிலாக, பின்வரும் தலைப்பை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

"உயர்நீதிமன்றத்தினால் மாத்திரம் தண்டிக்கப் படற்பாலதான தவறுகள்."

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

9. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.